1981 மார்ச் 5]

[முற்பகல் 10—10]

டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இடங்களில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இல்லங்கள் கிடைபெற்று வருகின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டபோது அதிலே சேர்க்கப்பட்டிருந்த தொழுநோய் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை எவ்வளவு? இப்போதுள்ள எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அந்த பத்து இடங்களிலுள்ள எண்ணிக்கை என்னிடம் இல்லை. சென்னை நகரில் கடந்த பத்து ஆண்டுகளில் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு இல்லங்களில் அனுப்பப்பட்ட பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை என்னிடத்தில் இருக்கிறது.

ஆண்டு.	ஆண்கள்.	பெண்கள்.
(1)	(2)	(3)
1970	152	52
1971	381	43
1972	302	91
1980–81	333	62

1980–81 ஆம் ஆண்டு மொத்தம் 395 நபர்கள்.

•

நடமாடும் செயற்கைமுறை உள்ளீட்டுப் பணி

*வினா எண். 395— திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் தாலுக்காவில் நடமாடும் Artificial input Service நடந்து வந்தது ஏன் நிறுத்தப்பட்டது?

(ஆ) மீண்டும் தொடரப்படுமா?

(இ) எப்பொழுது தொடரப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) கொடைக்கானல் தாலுகாவில் நடமாடும் Artificial input Service நிறுத்தப்படவில்லை. இந்த நடமாடும் ஊர்தி சம்பந்தப்பட்ட விரிவாக்க கால்நடை உதவி மருத்துவர் பதவி காலியாக இருப்பதால், கொடைக்கானல் கேந்திர கிராம நிலைய கால்நடை உதவி

மருத்துவர் இப்பணியினை செயல்படுத்தி வந்தார். இந்த நடமாடும் ஊர்திக்கு தனி விரிவாக்க கால்நடை உதவி மருத்துவர் நியமனம் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. டாக்டர் இளங்கோவன் என்பவர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஆ) மேற்கண்ட சூழ்நிலையில் நடமாடும் ஊர்தி செயல்பட்டு வருவதால் இப்பணி மீண்டும் தொடரப்படுமா என்ற நிலை எழவில்லை.

(இ) கேந்திர கிராம கால்நடை உதவி மருத்துவர் கூடுதல் பணி புரிந்தாலும் இப்பணி சிறப்பாக நடைபெற தக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கென தனியே தற்போது டாக்டர் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் இப்பணி இன்னும் சிறப்பாக நடைபெறும்.

வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம்.

*குறுகியகால வினா எண். 8— திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசு வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் உடனடியாக அமுல் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால் வருகின்ற நகராட்சி, பஞ்சாயத்து தேர்தல்களில் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை அரசு அமுல் நடத்துமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்தை உள்ளாட்சித் தேர்தல்களில் உடனடியாக பின்பற்றும் உத்தேசம் இல்லை.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களுக்கு, வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்க இந்திய தேர்தல் குழு தமிழக தேர்தல் அதிகாரியை கேட்டுள்ளதா ? கேட்டிருந்தால் இந்தப் பணி எந்த ஆண்டுக்குள் முடிவடைய வேண்டுமென்று கேட்கப் பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களுக்கு எல்லா வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்க வேண்டுமென்று இந்திய தேர்தல்குழு, தமிழக தேர்தல் அதிகாரியை கேட்டுள்ளது.

இது இந்த ஆண்டிலே துவங்கி, வருகின்ற 1984 ஆம் ஆண்டிலே முடிவடையும்.